ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீரங்கநாதர் சிந்து.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். ஒ.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீரங்கநாதர் சிந்து.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அண்டர்முனிவோர்கள் துதி ஸ்ரீரங்கநாதா ஓ
அண்டினேனென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அண்டினேனென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (க)

சண்டனுக்கஞ்சாமலுய்ய ஸ்ரீரங்கநாதா ஓ
சாயூஜயந்தந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சாயூஜயந்தந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா (உ)

செந்திருவளரும்ஞான ஸ்ரீரங்கநாதா ஓ
சிந்தைநோய்தீர்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சிந்தைநோய்தீர்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா (ங)

வஞ்சகப்பிரபஞ்சமீது ஸ்ரீரங்கநாதா ஓ
மயங்காமலென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா

ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மயங்காமலென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (௪)
ஆனையிடர் தீர்த்தவனே ஸ்ரீரங்கநாதா ஓ
அரவிற்பணிந்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அரவிற்பணிந்தவனே ஸ்ரீரங்கநாதா (௫)
அன்பர் துதிக்கிரங்கும் ஸ்ரீரங்கநாதா ஓ
அஞ்சேலுடன்வந்தாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அஞ்சேலுடன்வந்தாள்வாய் ஸ்ரீரங்கநாதா (௬)
ஜோதிசொரூபமான ஸ்ரீரங்கநாதா ஓ
சுகமதுதந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சுகமதுதந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா (௭)
ஆதியந்தங்கடந்த ஸ்ரீரங்கநாதா ஓ
அன்புகூர்ந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அன்புகூர்ந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (௮)
வேண்டியவரமளிக்கும் ஸ்ரீரங்கநாதா ஓ
மேன்மைதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா

ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மேன்மைதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (௯)

தஞ்சமென்றோரைக்காக்கும் ஸ்ரீரங்கநாதா ஓ
சௌபாக்யந்தந்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சௌபாக்யந்தந்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா (௧0)

தீனதயாநிதியே ஸ்ரீரங்கநாதா ஓ
சித்திதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சித்திதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (௧௧)

என்முகம்பார்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா ஓ
என்றுமடிமைநானே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
என்றுமடிமைநானே ஸ்ரீரங்கநாதா (௧௨)

மாதுதுயில்வளர்த்தி ஸ்ரீரங்கநாதா ஓ
மானத்தைக்காத்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மானத்தைக்காத்தவனே ஸ்ரீரங்கநாதா (௧௩)

பாண்டவர்கள்தூதுவனே ஸ்ரீரங்கநாதா ஓ
பாலகனைக்காருமையா ஸ்ரீரங்கநாதா

ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
பாலகனைக்காருமையா ஸ்ரீரங்கநாதா (கச)
ஆண்டாளடிபணிந்து ஸ்ரீரங்கநாதா ஓ
ஆனந்தசிந்துசொன்னேன் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
ஆனந்தசிந்துசொன்னேன் ஸ்ரீரங்கநாதா(கரு)
நம்மாழ்வாரடிபணிந்தேன் ஸ்ரீரங்கநாதா ஓ
நாடிவந்தேன்உன்னைநம்பி ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
நாடிவந்தேன்உன்னைநம்பி ஸ்ரீரங்கநாதா (கசு)
கம்சன்தனையழித்த ஸ்ரீரங்கநாதா ஓ
என்னைக் காக்கக்கடனுனக்கே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
என்னைக் காக்கக்கடனுனக்கே ஸ்ரீரங்கநாதா (கஎ)
அன்றுவிபீஷணர்க்கு ஸ்ரீரங்கநாதா ஓ
அபயாஸ்தந்தந்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அபயாஸ்தந்தந்தவனே சீரங்கநாதா (கஅ)
காளிங்கனிர்த்தனனே ஸ்ரீரங்கநாதா ஓ
கருணைவைத்தென்னையாள்வாய் சீரங்கநாதா

ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன சீரங்கநாதா
கருணைவைத்தென்னையாள்வாய் சீரங்கநாதா (௧௯)

ஆலிலைமேல்பள்ளிகொண்ட சீரங்கநாதா ஓ
ஆதிநாராயணனே சீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன சீரங்கநாதா
ஆதிநாராயணனே சீரங்கநாதா (௨௦)

சங்குசக்ராதரனே சீரங்கநாதா
ஜானகிமனோகரனே சீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன சீரங்கநாதா
ஜானகிமனோகரனே சீரங்கநாதா (௨௧)

இரணியனைசம்மரித்த சீரங்கநாதா ஓ
ஏழைகளைக்காப்பவர்யார் சீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன சீரங்கநாதா
ஏழைகளைக்காப்பவர்யார் சீரங்கநாதா (௨௨)

இரவும்பகல்துதித்தேன் சீரங்கநாதா ஓ
யிதங்கி அருள்தருவாய் சீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன சீரங்கநாதா
யிதங்கி அருள்தருவாய் சீரங்கநாதா (௨௩)

அற்புதகும்மி.

கும்மியடிப்பெண்கள் கும்மியடி நீங்கள்
குனிந்துநிமிர்ந்து கும்மியடி

செம்மையாகரங்க னாதனைக்கண்டுமே
சேவித்துகும்மியடியுங்கடி - ரங்கனை
பாவித்துக்கும்மியடியுங்கடி.

சர்ப்பசயனத்தை யுடையவரே - அன்று
தர்மர்க்குஅபயாஸ்தங் கொடுத்தவரே
கர்ப்புள்ளதுரோபதைபைக் கார்க்கும்பொருட்டாக
கணக்கில்லாசேலையைத் தந்தவரே (கும்)

ராவணசம்மாரஞ் செய்தவரே - அன்று
லட்சுமிசிறையை மீட்டவரே
பாதகனுகிய யிரணியனையன்று
பட்சமாய்ரெண்டாய் கிழித்தவரே (கும்)

தேவர்குறைகளை தீர்த்தவரே - மலையால்
கோபிகாஸ்திரீகளை கார்த்தவரே
பூதகிபாலைக்குடித்தவரே அவளை
போகவுயிரை மடித்தவரே (கும்)

அபயமபயமென் றோதும்யானைக் - கன்று
அர்ப்புதக்காட்சியைத் தந்தவரே
விதமாய்கொக்குவாய் ரெண்டாய்ப்பிளந்திட்டு
விஷமுள்ள கம்சனைக் கொன்றவனே (கும்)

ஆலிலைமேல்பள்ளி கொண்டவரே - அன்று
அன்பர்க்கருள்தந் தளித்தவரே
சோதியாய்தவழ்ந்து நடந்தவரேபாம்பை
சூட்சமாய்ரெண்டாய் கிழித்தவரே (கும்)

துளசிமாலையை யணிந்தவரே - அன்று
துரியனுக்குத்தூது சென்றவரே
நிதமாய்ஓரடி மண்கேட்டரக்கனை
நிலத்திலழுத்தியே கொன்றவரே (கும்)

கூர்மாவதாரங் கொண்டவரே - வெண்ணை
கூசாமல்வாரியே யுண்டவரே
சாதகமான விபீஷணர்க்கன்றுனீர்
சாயுச்சியபதவி தந்தவரே (கும்)

காரைக்கீரைகொய்ய வந்தவரே - நல்ல
காட்டில்மனம்வந்து நின்றவரே
பாலர்களாகிய பக்தர்களைக்கடைக்
கண்ணாலகண்டுநீ களிக்காயோ. (கும்)

ஸ்ரீரங்கநாதர்சிந்து - முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நாலாயிரப்பிரபந்த ஏலப்பாட்டு.

ஏலேலோ கோஷ்டிபுரம் கோவிந்தா - ஏலேலோ-பிரவந்த ஓடம் விருப்பமுடன் கோஷ்டிபுரம் உரகமெல்லணையான கப்பல்மீதில்-பெருக்கமுடன் பொய்கைபூதம் பேயார் புகழ்மழிசை பிரானுடனே திருக்குருகூர் சடகோபன்மாரன் செய்ய குலசேகரனும் உருக்கமுடன்பெரியாழ்வார் தொண்டரடிப் பொடியாருடன் கூடி திருப்பாணிஆழ்வாரும்கலியன்மதுரகவிஆண்டாளுடன்சிறப்பாக பன்னிருவர் அதி சிங்காரமாய்வந்தேறி (முடுக்கு) தாங்கள் தாங்கள் அருளிச்செய்த பிரபந்தங்களைப்பாட சௌமியநாராயணனை வந்தவர்கள்நாட பாங்காகவேபன்னிருவருங்கூட பக்தஜனரட்சகனை பணிந்துக்கொண்டாட மேலானமுதலாழ்வார் பிரபந்தமுன்னூறும் மூவடியளந்ததோர் பாதத்தில்சேரும் நான்முகன் திருவவந்தாதிதொண்ணூற்றுறும் நாராயணனுடைய நாமத்தைக்கூறும் திருமழிசைப்பிரான் ஆராய்ந்துகாட்டும் திருச்சந்தவிருத்தம் நூற்றிருபதுபாட்டும் கருமுதலானதற்குக கியானத்தையூட்டும் கர்மவினைகள்தம்மைக்கண்டித்துஓட்டும் திருவிருத்தம் திருவாசிரியப்பா அந்தாதி திருவாய்

மொழிஆயிரத்திரண்டு ஜோதிபெருமாள்திருமொழிநூற்
றைந்தும்ஓதி பின்புள்ள ஜனங்களுக்கின்பமுள்ள கியாதி
பெரியாழ்வார் திருமொழிநானூற்றறுபத்தொன்றும்பிர
பந்தமானதிருப்பல்லாண்டுமுன்னும்ஹரியுடையபரத்து
வத்தை அமோகமாகச் சொல்லும் அன்னிய மதங்களு
டைய ஆண்மைகளைவெல்லும் திருமாலைநாற்பத்துஐந்து
டையபொருளும் திருப்பள்ளியெழுச்சிஒருபத்துடைய
அருளும்பெரியோர்களுடையகோஷ்டியிற்றிரளும்பூர்வ
ஜென்மஞ்செய்த கர்மங்களுமமிரளும் அமலநாதபிரான்
ஈரைந்துங்கூட்டி அனந்தசயனனுக்கு ஆரமாய்ப்பூட்டி
கமலநயனனுடைய கருணையைக்காட்டி கர்மவினைகள்தீம்
மைகண்டித்து ஓட்டி திருமொழி ஆயிரத்துயெண்பத்து
நாலுஞ்சேர்த்து பெரியதிருமடல் சிறுத்திருமடலமைத்
து பிரபந்தமாய்த் திருவெழுகூற்றிருக்கையும் சமைத்து
கண்ணிநுண் சிறுதாம்பு பதினொன்றின்பெருக்கம் காரி
மாரனுடையபாலன்முன்னெருக்கஉண்ணவே அதிமதுர
மாகவேயிருக்கும் ஊழ்வினைவல்வினையிரண்டையுமுருக்
கும் பிஞ்சாய்ப்பழுத்தாண்டாள்பெருமாளைத்தேடி கொ
ஞ்சியே திருப்பாவைகூட்டத்தைநாடி அஞ்சனவண்ண
னை அணைந்து பணைஞ்சூடி ஆசையுடன் நூற்றுநாற்பத்து
மூன்றும்பாடி நாலாயிரப்பிரபந்தம் சரக்குகள் கொண்டு
நாதமுனிமுதலானபேர்களுஞ்சென்று பேராயிரநாமன்
பெருமையைக்கண்டு பூர்வாச்சாரிமுதலோர்களும்விண்

டு பூரணன்உகுந்தும் காரணனறிந்தும் நாரணனிருந்தும் வாரணன்தெரிந்தும் வண்ணமாடம்சூழும் திருகோஷ்டிபுரம்தன்னிலே வந்தாரவரிருந்தார் வானோரறிந்தார் மலர்சொரிந்தார் ஏலேலோ. (௧)

சந்தோஷமாய்க் கோஷ்டிபுரம் தன்னில் தடவரை மேலேகிடந்து அந்தமுடன்எதிராஜர் அங்கில் அஷ்டதசாவர்த்திகடந்துவந்த ஆழ்வான் ஆண்டானும் அப்பால் வாசல்தனிலேஇடைந்து சிந்தைமகிழ்ந்திருவருமாய்அந்ததெற்காழ்வான் சன்னதிஅடைந்து முந்திப் பிரமாண மூலமாமூலமந்திரம் சொல்லத்தொடர்ந்து சொந்தமுடன்கோஷ்டிநம்பி சரமார்த்தகஞ்சொலலவும்எங்கும்படர்ந்து (முடுக்கு) ஓரான்வழியாக உரைத்ததோர் மந்திரம் உலகாசிரியன்வாக்கால் கேட்டந்ததந்திரம் போரோலக்கமான கோஷ்டியைச்சார்ந்து பூரணவதாரனும் திருவாய் மலர்ந்து சேரவே அங்கிலுள்ளசெவிதாழ்த்தியிருக்க திருவனந்தாழ்வானுகடல்போல்பெருக்க ஒருநாளுங்கேளாத வாக்கியந்தன்னை உத்தமகோஷ்டிகள்கேட்டவர்கள்முன்னே பெருமையாகவே தேசம்பூரிக்கக்கண்டு பொறாமையால்சில வைஷ்ணவர்சென்று திருவாராதனஞ்செய்யுங் காலங்கள்தன்னில்திருக்கோட்டியூர்நம்பிசந்நிதிமுன்னில் ரகசியமாகவேநீருரைத்தபொருளைநிறைத்திட்டார்சபைதன்னில் எதிராஜனருளை அந்தையினாலவருரைத்திட்டாரென்று அதிககோபத்துடனே நம்பியுஞ்சென்று பக

வத்கோஷ்டிக்குமுன்வந்துநின்று பிரகாசிக்கும் ராமாநு
ஜன்தன்னைக்கண்டு தன்னாச்சாரியருடைய சொற்றவிர்ந்
தபேருக்குத்தரணியிலேயென்ன பலஞ்சொல்லும் எந்த
நேர்க்குப் பன்னகருபனுங்கேட்டுள்ளங்குளிர்ந்து பரமா
ச்சாரியருடைய பாதத்தைப்பணிந்து முன்னாகவேயிரு
க்கும்நரகங்கள் தவிர வேறேநரகங்கள்சிஷ்டிக்கவேண்டும்
இவர்ஒருவன் நான்நரகத்தை யடையவும்நேரும் உலகத்
திலுள்ளோர் உஜ்ஜீவித்தால்போரும் வருமந்தவார்த்தை
யைநம்பியுங்கேட்டு மனந்தன்னிலே அதிஆச்சரியப்பட்டு
தருமிந்தப்பரசமர்த்தியெந்தனுக்குமுன்பு தங்காமல்போ
யிற்றேஇதினுடைய அன்பு இருமிந்தகோஷ்டிக்கு நாயக
ரத்நமாக இதரமதங்களெல்லாம் அதமாகப்போகஆழ்வா
னொருவனுக்கு இதனுடையபொருளை ஆனந்தமாகவே
உறைத்திடுமருளை தாழ்வில்லைஎம்பெருமானாரை யின்று
தழுவியேகரங்களால் ஆனந்தங்கொண்டுவாழ்வீர்நீரின்று
வாக்காலேவொழுக்கி வைஷ்ணவசித்தாந்தபணியேயென்
றழைத்தார் உபயவிபூதிநிர்வாகருங்கேட்டு உலகாச்சாரி
யார்முதல்வாழுமந்தநாட்டில் அபயங்கொடுத்தருளி அடி
யாரைநோக்கி அந்திமோபாய நிஷ்டைதன்னை தேக்கி
சபைதனிலேஉள்ளதாசரீடேற சரமாஸ்த லோகார்த்தத்
தை சேட்டுமேவர்நாடதன்னில் அறிந்தும்உன்னிலும்தெ
ரிந்தும்பன்னைகள்மிகுந்தும் பிரஜைகள்கலந்தும்பாடிகோ
ஷ்டிகூடிபடகில்நாடி கடலில்ஓடி பாஷ்யகாரர் பணிந்து
திவயமணிந்துமணந்தெளிந்துநீரில்துளைந்து ஏலே. (௨)

வையமெலாம்உண்டுமிழ்ந்த கோஷ்டி மாதவன் சந்
நதிசென்றுசெய்ய இன்று உற்சவங்களனேகம் சேதனர்
கள்கூடி நின்றுஉய்யவே உலகந்தன்னிலுள்ளோர் உத்த
மனைமனதில்கொண்டு ஐயனுடைய அருளானகடல்அலை
களுடன்ஓடிக்கண்டு மெய்யாகவிஸ்வகர்மா இந்தவிஷ்ணு
வுக்குவற்குமென்று துய்யஅலங்காரம்செய்து தெப்பம்
சௌமியருடன்முன்னேகொண்டு மூடுக்கு வச்சிரவை
டூரியக்கால்களும்நாட்டி மாணிக்கம்பச்சை பலகைகள்கூ
ட்டி உலகளந்தநாதனுக்குஉடமைகளும்பூட்டி தலைஅல
ங்காரமுதல் சிகரங்கள்வைத்து தங்கத்தினால் பிரதமைக
ண்ணாடிஒத்து கலையுடையநாதனைக்கண்டுசேவித்துகாம
க்குரோத்தம் மார்ச்சல்லியமற்று ஆலவட்டமுதல் அந்த
ணர்கள்வீச அனேகவிதபட்சிஜாலங்களுமகிச மேலான
ரம்பைஊர்வசி ஆடிக்கூச விஜயஜயாஎன்று கட்டியங்கள்
பேச ஆனையொடு குதிரைசிம்ம ஆளிகளைவருத்தி அனு
மாருடன்கருடன்ஆள்களைப்பொருத்தி சேனைத்தலைவனை
அதின்மேல்செலுத்தி திருவுடையநாதன் திருவடிகள்
போற்றி சேவதப்படைவகை காவல்கள்பூட்டி சுற்றிவி
ல்லம்புகள் சோதியுடன்நாட்டி கோவர்த்தனஉத்தாரண
ம்சேவைகள்காட்டி கோபிகள்எல்லோருங்கூடிக்கைதட்
டி நாலுப்பெரும்பறை வாத்தியங்கள்அடிக்க நாகசாரம்
உஞ்சலாவிகளும்படிக்க பகவானுடைய இருபாதமலர்பி
டிக்க பக்தகோஷ்டிகளுடைய பாபங்கள்திடிக்க கப்பலு

டையமங்களம் கன்னியர்கள்பாட காலமேகவண்ணன் கண்டுமங்கோட உற்பாதமாய்தேவருகந்துமலர்போட உபயநாச்சியாரை அணைந்துவிளையாட சங்குசக்கரம்பஞ்சாயுதங்கள்தரித்துதாசகோஷ்டிகளுடையதோஷத்தை ஹரித்து அங்கத்தில்பீதாம்பரங்களுந் தரித்து அனந்தகோஷ்டிநாமன் அங்கேஜொலித்து க்ஷேமமுடனேகையில் செங்கோலுங்கொண்டு சேதனகோடிகளைரட்சிக்கக்கண்டு நேமமாகவே அந்த நித்தியனும்அண்டி நிலமகள்குலமகள்இருவருடன்நின்று சாமளாவண்ணனைச் சரக்காக அள்ள தாசானுதாசர்கள் கப்பலைத்தள்ள கோமளமாகவே கூடியேமெள்ள கோவிந்தநாமத்தைஎல்லோருங்கொள்ள சுற்றியேகப்பலைச் சுக்கான்திருப்ப சவுமியநாராயணன் கூடியேவிருப்ப பற்றியேபாய்மரம் பக்தர்கள்குறிப்பாய் பக்தபரிபாலன் நித்தியகல்யாணன் பாண்டவர்க்கநுகூலன் பாமரர்க்குக்காலன்கூடிவிளையாடி கப்பலோடிஸ்துதிபாடி கோஷ்டிநாதன்தழைக்க பக்தரழைக்கதாசர்பிழைக்க அருளிஇழைக்க ஏலே (ந)

நின்றிருந்தும் கிடந்தும் அந்நீலமேகனைப் போற்றி உண்டுஉலகமுமிழ்ந்த அந்த உத்தமநாமத்தை வாழ்த்தி பண்டுபிரக்கலாதனுக்காய்வந்தபகவானுடையகீர்த்திசென்று அந்த சேதனர்கள்ஸ்ரீதானைஏத்தி கண்டவர்களெல்

லாருங்கூடிகண்ணன் அடியில்தாழ்த்தி விண்டவர்கள்வி
னைகள்தம்மை இந்த விஷ்ணுவுடையஜோதி (முடுக்கு)
முட்டியேகப்பலை வேகமாய்த்தள்ள மூவுலகிலுள்ளவர்கள்
வந்தெதிர்கொள்ள குட்டிஜோசியருங் கூடியேமெள்ள
கோவிந்தனோடேநிர்ஹேதுகிருபைகொள்ள கழட்டியே
காதிலிட்ட கடுக்கனைச்சாற்றி கணையாழிமோதிரங் கைத
ன்னில்ஏற்றி மிரட்டியே வெண்ணெயுண்ட வித்தகனைப்
போற்றி மூவடிஅளந்தவனை முன்னேநிறுத்தி ஓரிடம்பி
ருடம்பாகபூரித்துஉபயநாச்சிமாரையுள்ளத்தில்வைத்து
சேரஜடைசிங்காரம்பண்ணி சமர்ப்பித்து தம்பதிசமேத
ராய்வந்துசேவித்து கோஷ்டிநாதர்பாதம் சிரசாகவைத்
து கோதைதிருமாமகளை மனஸால்ஸ்மரித்து மேட்டியா
கயிருக்கும்விண்ணுலகம்பெற்று வேறேசாதனம்முதலா
னதும் அற்றுதேடியேவந்தவர்கள்திருவடியைப்போற்றி
திருவா பரணங்கள்விதம் விதமாய்ச்சாற்றி ஓடியேகப்ப
வில்ஒளிகளையேற்றி உலகமுண்டபெருவாயனைவாழ்த்தி
ஆடியேரம்பை ஊர்வசியுஞ்சிறக்க அந்தரதுந்துமி வாத்
தியங்கள்உறக்க பாடியேகின்னரர்கிம்புருடர்பறக்க பாரி
யுடனேலோகநாதனும்சுருக்காய் சோடித்துமண்டபத்தி
ல் சௌமியரும்வந்து சோடசஉபசாரங்கள் கண்டுமனம
கிழ்ந்து கூடியேசிங்காசனந் தன்னிலிருந்து குலமாமகள்

நிலமாமகளை அணைந்து ஆராதனக்கிரமம் அர்ச்சகர்செய்ய அங்கணர்கள்மந்திப் புஷ்பங்கள் பெய்ய பேரோலக்கமாகப் பிரஜைகளும்உய்ய பூரணதயாபரன் தேவியுடன் வெய்ய லட்சங்கோஷ்டி அமுதுபடி தளிகையுமிட்டு நிலமாமகள்நாதன் அம்மைசெயும்பொருட்டு பட்சியபோககியத்துடன் பழவகையுந்தொட்டு பால்குழம்பும்போனகமும்பள்ளியத்தில்இட்டு நூறுகடாரத்தில்அக்கராவடிசில் நூதனமாகவே இருக்கின்ற அருசில்வேறுவேறுகவே ஓகோரைமடிசில் வேண்டியேபோதனர்கள் விட்டார்கள் வடிசில் சேரவேபாரியுடன் சிறப்புகளும்உண்டு சேதன கோஷ்டிகட்கு வினியோகம்கண்டு நேராகதிருப்பாற்கடல் தன்னில்நின்று நிலமா மகள்நாதன் ஆனந்தங்கொண்டு ரட்சகன்தொடர்ந்தும் பட்சமாய்நடந்தும் தட்சணம் மேல்கிடந்தும் பாரியையடைந்தும் பாலன்வெகுசீலன் அநுகூலன்ஜெகலோலன் லட்சுமிநாதநினைந்தவரமீந்து மனமகிழ்ந்து அங்கிருந்தும் ஏலேலோ (௪)

நாலாயிரப்பிரபந்த ஏலப்பாட்டு

முற்றிற்று.